# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.

**Spl.C.C.No.20 of 2025**

(Spl.C.C.No.1 of 2018 - CJM, Vellore)

Prosecution Witness No.P.W.6 (L.W.8)

| | |
|---|---|
| Name | பவித்ரா |
| Father/Husband Name | குமார் |
| Calling/Occupation | அலுவலக உதவியாளர், மாவட்ட நீதிமன்றம், திருப்பத்தூர். |
| Age | 31 |
| Address | எண்.0/11, ராஜிபட்டி, காட்பாடி, குடியாத்தம். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 15.09.2025.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் குடியாத்தத்தில் வசிக்கிறேன். நான் திருப்பத்தூர் நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளராக மாவட்ட நீதிமன்றத்தில் பணியாற்றி வருகிறேன். எனக்கு 21.11.2015 அன்று திருமணமானது. நான் ஆசிரியர் பயிற்சி மற்றும் B.A. படித்துள்ளேன். தமிழக அரசால் வழங்கப்படும் திருமணத்திற்காக வழங்கப்படும் நிதி உதவி பெற என் தாயார் Online–ல் மனு செய்திருந்தார். அது சம்பந்தமாக குடியாத்தம் பிடிஓ அலுவலகத்தில் வந்து விசாரித்துவிட்டு ஆவணங்களை கொண்டு வரச்சொன்னார்கள்.

என் அம்மா ஆவணங்களை குடியாத்தம் BDO அலுவலகத்திற்கு 06.01.2016 அன்று எடுத்து சென்றதாகவும், அங்கு சித்திராங்கி என்பவரை சந்தித்ததாகவும், அவர் என் தாயாரிடம் ரூபாய் 2000/- பணம் கொண்டு வந்தால்தான் அந்த மனு சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பேன் என்று சொன்னதாக என் அம்மா சொன்னார். அதன் பின்னர் வேலூர் Vigilance அலுவலகத்தில் என் தாய் புகார் கொடுத்ததாக சொன்னார். 07.01.2016 அன்று என் அம்மா எங்கள் வீட்டில் தங்கிவிட்டு மறுநாள் காலை Vigilance அலுவலகம் போவதாக சொல்லிவிட்டு சென்றார். 10.01.2016 அன்று என் தாயார் என்னிடம் சித்திராங்கி என்பவரை Vigilance போலீசார் கைது செய்துவிட்டதாக சொன்னார். போலீசார் என்னை விசாரித்தனர். என்னிடம் காண்பிக்கப்படும் அ.த.சா.ஆ.2 ஆவணம்தான் என் விண்ணப்ப மனு மற்றும் பள்ளி கல்வி சான்றிதழ்கள், வருமான வரி சான்று ஆகியவைகள் என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்தபோது முதன்மை சாட்சியத்தில் சொன்னதைத்தான் தட்டச்சு செய்தார்கள் என்றால் ஆமாம். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் ஆமாம். சித்திராங்கி என்பவர் என்ன வேலை செய்தார் என்று தெரியுமா என்றால் அவர் BDO அலுவலத்தில் பணியாற்றினார் என்பது தெரியும். ஆனால் என்ன பதவி என்று தெரியாது. 07 ம் தேதி என் அம்மா இரவு வீட்டில் தங்கியதாக சொல்லும் நான் அன்று முழுக்க எங்கள் வீட்டில்தான் இருந்தாரா என்றால் அன்று இரவு எங்கள் வீட்டில்

தங்கினார். 08.01.2016 அன்றுதான் என் அம்மா முதன்முதலாக Vigilance அலுவலகம் செல்வதாக சொல்லிவிட்டு போனதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் ஏற்கனவே பணம் ரூபாய் 2000 கேட்பதாக என் தாயார் என்னிடம் சொன்னார் இது சம்பந்தமாக Vigilance அலுவலகம் போவதாக சொன்னார். 08ம் தேதி புகார் கொடுப்பதாக சொல்லிவிட்டு போனார். 07.01.2016 அன்று Vigilance அலுவலகத்திற்கு என் தாயார் போகவில்லை என்றால் போகவில்லை. 08ம் தேதிதான் போவதாக சொல்லிவிட்டு போனார்.

போலீசார் விசாரணையில் BDO அலுவலகத்திலிருந்து அலுவலர்கள் எங்கள் வீட்டிற்கு சென்று விசாரணை செய்துவிட்டு சம்பந்தப்பட்ட அசல் ஆவணங்களை கொண்டு வந்து அலுவலகத்தில் காண்பிக்கும்படி சொல்லிவிட்டு சென்றதாகவும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை BDO அலுவலகத்தில் 06.02.2016ம் தேதி எடுத்து சென்று காண்பித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆம் சாட்சி மீண்டும் 06.01.2016 என்று சாட்சியம் அளிக்கிறார். நான் 12ம் வகுப்பு தேர்ச்சி அடைந்துவிட்டேன் என்பதற்கு எனக்காக என் அம்மா கொடுத்த விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ளதா என்றால் இணைத்திருப்பார். என் அம்மா சித்திராங்கி என்பவரை பார்க்கவில்லை என்றும் போலீசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2025.09.15 18:15:14 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.

**Spl.C.C.No.20 of 2025**

(Spl.C.C.No.1 of 2018 - CJM, Vellore)

Prosecution Witness No.P.W.7 (L.W.9)

| | |
|---|---|
| Name | ஹிம்தாராம் |
| Father/Husband Name | போலோராம் |
| Calling/Occupation | நகை அடகு கடை |
| Age | 56 |
| Address | NO.8, I MAIN ROAD, VALLALAR NAGAR, SAINATHAPURAM, VELLORE. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 15.09.2025.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது விருப்பாச்சிபுரத்தில் வசிக்கிறேன். நகை அடகு கடை சுமார் 33 ஆண்டுகளாக நடத்தி வருகிறேன். உரிமம் எண் 769/93 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் நகை அடகு ரசீதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதை மஞ்சுளா என்பவர் கம்மல், இரண்டு கிராம் தொங்கல் தோடு ஆகியவற்றை அடமானம் வைத்து ரூபாய் 1500/- 08.01.2016 அன்று பெற்றுக்கொண்டார். **நான் கொடுத்த ரசீது அ.த.சா.ஆ.9** ஆகும். என்னை Vigilance போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இதற்கு முன்பு எத்தனை வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் இதுதான் முதல் வழக்கு. 2016 ம் வருடம் 08 ம் தேதி ஜனவரி மாதம் ஒரு கிராம் தங்கத்தின் விலை என்ன என்றால் சரியாக நினைவில்லை சுமார் 3000 ரூபாய் தோரயமாக இருக்கும். இரண்டு கிராம் தங்கத்திற்கு அவர் கேட்டிருந்தால் பாதி தொகை கொடுத்திருப்பேன் என்றால் ஆமாம். போலீசார் சொன்ன மாதிரி நான் ஆவணம் தயார் செய்து கொடுத்துள்ளேன் என்றும் அப்படி அடமானம் எதையும் வைக்கவில்லை என்றால் சரியல்ல.

இரண்டு கிராமிற்கு தோரயமாக ரூ.4000/- கொடுத்திருக்கலாம் என்றும் ஆனால் போலீசார் சொல்லிக்கொடுத்து ரூபாய் 1500 கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அவர் நகை அடகு வைத்து கேட்டது ரூபாய் 1500 ஆகும். அவர் வழக்கமாக அடகு வைக்கும் வாடிக்கையாளரா என்றால் அவர் அதற்கு முன்பு அடகு வைக்கவில்லை. மஞ்சுளாவின் உறவினர் மூலமாகத்தான் அடகு வைக்க வந்தார். போலிசாருக்கு சாதகமாக அவர்கள் சொல்லிக்கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2025.09.15 18:15:20 +0530